


22.06.2024

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு.நரேந்திரமோடி பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனாவுடன் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக புதுதில்லியில் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

2. மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் 53ஆவது சரக்கு சேவை வரி குழு கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

3. தமிழகத்தின் வளர்ச்சிக்கான மத்திய அரசின் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தை 2030ம் ஆண்டிற்குள் குடிசை இல்லா மாநிலமாக மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநில ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி கூறியுள்ளார்.

5. ஐ.சி.சி. உலககோப்பை 20-20 கிரிக்கெட் சூப்பர் 8 சுற்றில் ஆன்டிகுவாவில் இன்று இந்தியா பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனாவுடன் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக புதுதில்லியில் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

2 நாள் அரசுமுறை பயணமாக இந்தியா வந்துள்ள திருமதி ஷேக் ஹசீனாவிற்கு குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று காலை பாரம்பரிய முறையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமது இந்திய பயணத்தின் ஒருபகுதியாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத்துணைத்தலைவர் திரு.ஜக்தீப் தன்கர் உள்ளிட்டோரையும் பங்களாதேஷ் பிரதமர் சந்திக்கிறார்.

இந்தியாவின் நம்பகமான நட்பு நாடுகளில் ஒன்றாக திகழும் பங்களாதேஷூடன் வர்த்தகம் தொழில், பாதுகாப்பு, எரிசக்தி, அறிவியல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான முக்கிய ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

நிர்மலா சீதாராமன்

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனை கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

தமிழக நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு உட்பட மாநில மற்றும் யூனியன் பிரதேச நிதியமைச்சர்கள் இதில் பங்கேற்றனர்.

இதனிடையே 53ஆவது சரக்கு சேவை வரி குழு கூட்டம் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

வெல்லபாகு உற்பத்திக்கான சரக்கு சேவை வரியை தற்போதைய 28 சதவிகிகத்திலிருந்து 5 சதவிகிதமாக குறைக்க ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட நிலையில்,

கால்நடை தீவணங்களுக்கான உற்பத்தி செலவை குறைப்பதற்கும் இது வகை செய்யும்.

மேலும் பொடி வகையிலான சிறுதானிய உணவு பொருட்களுக்கு வரி விலக்கு அளிப்பது குறித்தும் இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்படும் என தெரிகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

எல்.முருகன்

தமிழகத்தின் விரைவான வளர்ச்சிக்காக மத்திய அரசிடமிருந்து போதிய நிதி பெற்றுத்தரப்படும் என மத்திய தகவல் ஒலிரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் தமிழகத்திற்கு கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசு 11 லட்சம் கோடி ரூபாய் வழங்கியதாகவும், மாநிலத்தின் வளர்ச்சிக்கான மத்திய அரசின் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று கூறினார்.

தொழில் வளம் நிறைந்த நாமக்கல் திருச்சங்கோடு உள்ளிட்ட பகுதிகளில் லாரிகள், சரக்கு வாகனங்கள், கோழிப்பண்ணை உள்ளிட்டவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சர்வதேச திரைப்பட விழா

18ஆவது மும்பை சர்வதேச திரைப்பட விழா நிறைவடைந்தது.

திரைப்பட பதிவிற்காக இந்தாண்டு மிக அதிக அளவிலான பிரதிநிதிகள் பங்கேற்ற நிலையில் 59 நாடுகளின் 314 திரைப்படங்கள் திரையிடப்பட்டன.

இந்தியா இன் அம்ரித் கால் திரைப்படத்திற்கு சிறந்த குறும்படத்திற்கான விருது வழங்கப்பட்டது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி விஷ சாராய சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 54 ஆக அதிகரித்துள்ளது.

இதனிடையே கள்ளச்சாராயத்தை தடுக்க மாவட்ட நிர்வாகங்கள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து மாநிலத்தின் பல்வேறு இடங்களில் பிஜேபி சார்பில் அரசுக்கு எதிராக ஆர்பாட்டங்களும் நடைபெற்றன.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஐ.பெரியசாமி

2030 ஆண்டிற்குள் குடிசை இல்லா தமிழகம் என்ற நிலையை எட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் இன்று தமது துறை கொள்கை விளக்க குறிப்பில் இதனை தெரிவித்த அவர் புதிதாக செயல்படுத்தப்பட உள்ள கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் மாநிலத்தில் ஓராண்டிற்குள் ஒரு லட்சம் வீடுகள் கட்டப்படும் என்றார்.

1996ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை கட்டப்பட்ட வீடுகளில் பழுதடைந்த ஒன்றரை லட்சம் வீடுகள் சீரமைக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

பல்வேறு ஊராட்சிகள் தன்னிறைவு பெற்ற ஊராட்சிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக கூறிய அவர் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 55 ஆயிரம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

முன்னதாக பேரவையில் மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதில் அளித்து பேசிய அமைச்சர் 60 கோடி ரூபாய் மதிப்பில் 60 நியாயவிலைக்கடைகள் கட்டித்தரப்படும் என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கே.என்.நேரு

தமிழ்நாட்டில் கோவில்கள் அதிகம் உள்ள நகரங்கள் மேம்படுத்தப்படும் என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

பேரவையில் இன்று தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதில் அளித்து பேசிய அவர் பல்வேறு பேரூராட்சிகள் நகராட்சிகளாக தரம் உயர்த்தப்படும் என்றார்.

பாழடைந்த குடிநீர் குழாய்கள் அனைத்தும் மாற்றப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் உறுதி செய்யப்படும் என்று கூறினார்.

ஏற்காடு உள்ளிட்ட சுற்றுலா தலங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருவதாக கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

எ.வ.வேலு

தமிழகத்தில் முதலமைச்சர் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புறவழிச்சாலைகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவிதத அவர் உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி, தேனி நகரப்பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க உசிலம்பட்டி அருகே புறவழிச்சாலை,

நெய்வேலி வடக்கு மேலூர் பாச்சாரபாளையம் சாலையை அகலப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கேள்வி நேரத்தின்போது வெளியான மேலும் சில தகவல்கள்

ஆற்காடு தொகுதி விளாப்பாக்கம் பேரூராட்சியில் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில வருவாய் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட மலை கிராமத்திற்கு பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலத்தின் ஒப்புதலுடன் கோலார் தங்கவயல் சித்தூருக்கு பேருந்து சேவை தொடங்கப்படும் என்றார்.

தமிழகத்தில் ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த 517 திருக்கோவில்களில் திருப்பணிகள் நடைபெற்று வருவதாக கூறிய மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு வரலாற்று சிறப்புமிக்க கோவில்கள் 300 கோடி ரூபாய் மதிப்பில் புனரமைக்கப்படும் என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

அஇஅதிமுக வெளிநடப்பு

முன்னதாக பேரவை இன்று கூடியதும் கேள்வி நேரம் தொடங்குவதற்கு முன்பாக கள்ளக்குறிச்சி விஷசாராய விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என எதிர்கட்சி தலைவர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தலைமையில் அஇஅதிமுக உறுப்பினர்கள் குரல் எழுப்பினர்.

இதற்கு அனுமதி மறுத்த பேரவைத்தலைவர் திரு.அப்பாவு கேள்வி நேரத்தை ஒத்திவைக்க முடியாது என்றும், கேள்வி நேரம் முடிந்ததும் எதிர்கட்சி உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்றார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அஇஅதிமுக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

திருச்சி

திருச்சி மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட போதை பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் எச்சரித்துள்ளார்.

திருச்சி கலையரங்கத்தில் இன்று நடைபெற்ற போதை பொருள் பயன்பாட்டிற்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேசிய அவர் அரசின் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இருவரி

பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த 6 மாதங்களில் சட்ட விரோதமாக மது விற்பனை செய்தல் பதுக்கிவைத்தல், கடத்தியவர்கள் என 829 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சியாமளா தேவி தெரிவித்துள்ளார்.

தர்மபுரியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டீபன் ஜேசுபாதம் தலைமையில் போதை பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

நாகை மாவட்டத்தில் அக்னிபாத் திட்டத்தின் கீழ் விமானபடையில் ஆள்சேர்ப்பு தேர்விற்கு அடுத்த மாதம் 28ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜானி டாம் வர்க்கீஸ் தெரிவித்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

திருவாரூர் நெல் திருவிழா

திருவாரூர் மாவட்டம் திருத்துறை பூண்டியில் தேசிய நெல் திருவிழா இன்று நடைபெற்று வருகிறது.

இதன்ஒருபகுதியாக பாரம்பரிய நெல் ரகங்கள், உணவு வகைகள், இயற்கை வேளாண் மற்றும் உணவு கண்காட்சியும் நடைபெற்றது.

மீட்டெடுக்கப்பட்ட மாப்பிள்ளை சம்பா, பிள்ளை மிளகி, திருப்பதி சாரம், கொத்தமல்லிசம்பா உள்ளிட்ட 174 வகையான பாரம்பரிய நெல் ரகங்கள் இதில் காட்சிபடுத்தப்பட்டன.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கிரிக்கெட்

ஐ.சி.சி. உலககோப்பை 20-20 கிரிக்கெட் சூப்பர் 8 சுற்றில் ஆன்டிகுவாவில் இன்று இந்தியா பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

இன்றைய போட்டியில் வெற்றிபெறுவதன் மூலம் அரையிறுதிக்குள் நுழையும் வாய்ப்பு அதிகரிக்கும் என்பதால் இந்தியா முனைப்புடன் களமிறங்க உள்ளது.

முதலாவது அரையிறுதி போட்டி வரும் 26ஆம் தேதியும்,

2ஆவது அரையிறுதி போட்டி வரும் 27ஆம் தேதியும் நடைபெற உள்ளன.

உலக கோப்பைக்கான இறுதி போட்டி பார்படாசில் வரும் 29ஆம் தேதி நடைபெறும்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு